வெற்றிடங்கள்

திட்ட ஊழியரின் ஆட்சேர்ப்பு

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் - கட்டம் 2 திட்டம்

திட்வா சூறாவளிக்கு பின்னரான புனரமைப்பு மற்றும் வாழ்வாதார உதவித் திட்டம்

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) 02/2026 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அரச ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி திட்வா சூறாவளிக்கு பின்னரான புனரமைப்பு மற்றும் வாழ்வாதார உதவித் திட்டம் மற்றும் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்திற்காக (இரண்டாம் கட்ட திட்டம்) பின்வரும் பதவிகளுக்கு "ஒப்பந்த அடிப்படையில்" திட்ட ஊழியர்களின் ஆட்சேர்ப்புக்கு தகுதி பெற்ற மற்றும் அர்ப்பணிப்புடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (2028.12.31 வரையான காலத்திற்காக) திட்வா சூறாவளிக்கு பின்னரான புனரமைப்பு மற்றும் வாழ்வாதார உதவித் திட்டத்தின் மொத்தச் செலவு 25-200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பதோடு, மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் - இரண்டாவது கட்ட திட்டத்தின் மொத்தச் செலவு 536.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் (திட்டக் காலம் :- 2026 - 2031). மேலும் இதற்காக உள்நாட்டு மூலங்களில் இருந்தும் பங்களிப்பு பெறப்பட்டுள்ளது.

பதவி சார்ந்த சம்பளம் 2026.03.28 ஆம் திகதிய 02/2026 முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) சுற்றுநிருபத்தின் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது

வெற்றிடங்கள் - திட்வா சூறாவளிக்கு பின்னரான புனரமைப்பு மற்றும் வாழ்வாதார உதவித் திட்டம்

இலக்கம்	பதவி	சம்பள அளவு	பதவி எண்ணிக்கை	சேவை இடம்
1	பொறியியலாளர்	D	01	தலைமை அலுவலகம் - கொழும்பு
2	கணக்காளர்	D1	01	
3	சிரேஷ்ட சுற்றுச்சூழல் அதிகாரி	E	02	
4	சமூக பாதுகாப்பு அதிகாரி	F	01	
5	பெறுகை அதிகாரி	F	02	
6	முகாமைத்துவ உதவியாளர்	MN - 2	03	
7	அலுவலக உதவியாளர்	PL 2	01	

இலக்கம்	பதவி	சம்பள அளவு	பதவி எண்ணிக்கை	சேவை இடம்
1	சிரேஷ்ட பொறியியலாளர்	C	02	இலங்கை மகாவலி அதிகாரசபை

இலக்கம்	பதவி	சம்பள அளவு	பதவி எண்ணிக்கை	சேவை இடம்	பிராந்திய அலுவலகம்	
					அநுராதபுரம்	பொலன்னறுவை
1	சிரேஷ்ட பொறியியலாளர்	**C**	02	நீர்ப்பாசன திணைக்களம்	**01**	**01**
2	பொறியியல் உதவியாளர்	**E**	12		10	02
3	வரைவாளர்	**F**	**09**		**06**	**03**

வெற்றிடங்கள் - மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (இரண்டாம் கட்ட திட்டம்)

இலக்கம்	பதவி	சம்பள அளவு	சேவை இடம்	பதவி எண்ணிக்கை
1	கணிய அளவையாளர்	D	திட்ட செயற்பாட்டுப் பிரிவு – மடாட்டுகம	01
			திட்ட செயற்பாட்டுப் பிரிவு – மொரகஹகந்த	01
2	வரைவாளர்	F	திட்ட செயற்பாட்டுப் பிரிவு – மடாட்டுகம	01
			திட்ட முகாமைத்துவ பிரிவு- மொரகஹகந்த	01
3	முகாமைத்துவ உதவியாளர் - கணக்கு	MN - 2	திட்ட முகாமைத்துவ பிரிவு	05
4	முகாமைத்துவ உதவியாளர்	MN – 2	திட்ட முகாமைத்துவ பிரிவு	03
			திட்ட செயற்பாட்டுப் பிரிவு – மடாட்டுகம	05
			திட்ட செயற்பாட்டுப் பிரிவு – மொரகஹகந்த	06

பொருந்தும் சுற்றுநிருபம்:

- பிரிவு D – F சம்பள அளவுக்காக 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் பொருந்தும்.
- உதவிப் பணிக் குழுவினருக்காக 10/2025 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் பொருந்தும். (உதவிப் பணிக் குழு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை கருத்தில்கொள்ளப்படும்.)

விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சி மற்றும் அரச ஒழுங்குமுறைகள் தொடர்பில் பரீச்சயம் மற்றும் கணினி அறிவு கட்டாய முன் தேவைகளாகும். இலங்கை வெளிநாட்டு நிதியிலான திட்டங்களில் சேவை அனுபவம் மேலதிக அனுகூலம் ஒன்றாக அமையும். அரச சேவையில் தற்போதுள்ள விண்ணப்பதாரர்கள் மேலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் தமது விண்ணப்பங்களை திணைக்கள தலைவர் மூலமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு https://mwsip.lk/careers/ என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்

(மேல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபங்களுக்கு நிதி அமைச்சின் இணையதளத்தை பார்க்கவும்.)

விண்ணப்பதாரர்களினால் கல்வி மற்றும் தொழில் தகைமை மற்றும் சேவை அனுபவத்தைக் குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவை (Curriculum Vitae) மற்றும் உறவினர் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களுடன் விண்ணப்பங்களை 2026.10.26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். திட்வா சூறாவளிக்கு பின்னரான புனரமைப்பு மற்றும் வாழ்வாதார உதவித் திட்டம் மற்றும் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் – கட்டம் 2 திட்டம் என திட்டத்திற்கு தொடர்புடைய வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களினால் குறித்த திட்டத்தின் பெயர் மற்றும் விண்ணப்பிக்கும் வேலை இடத்தை விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிட்டு, வெவ்வேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடது மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

திட்டப் பணிப்பாளர்
மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு திட்டம் - கட்டம் II திட்டம்
(மனித வள பிரிவு)
இல. 493/1/1, டீ.பி. ஜாயா மாவத்தை
கொழும்பு 10.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக அழைக்கப்படுவர். எந்த வகையான ஆதரவு திரட்டலும் (Canvassing) தகைமை இழப்பாக அமைவதோடு அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.